17.02.2026.
S.C.No.11/2021

Crl.M.P.4465/2023 மனு நாள் 11.12.2023 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா.8 ராமர் மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி குறுக்கு விசாரணை –

இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி எனது மகன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் முதலில் சண்டை நடந்ததை நான் பார்க்கவில்லை. சம்பவத்தை நான் பார்த்தேன். சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என் மகன் அழகர்சாமிக்கும் எதிரி சங்கிலிக்கும் திண்டுக்கல் ரோட்டில் வைத்து முதலில் சண்டை நடந்தது. அந்த சண்டைக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சண்டை குறித்து ஊர் நாட்டாண்மை மற்றும் ஊரில் உள்ள பெரியவர்களிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். மதியம் நடந்தது அவர்களுக்குள் ஏற்பட்ட சாதாரண சண்டை என்றால் சரிதான். முதலில் எதிரி வீட்டிற்கு என் மகன் கிருஷ்ணசாமி மட்டும் போனான். பின்னால் நாங்கள் போனோம். எங்களுடன் 10 பேர் வந்திருப்பார்களா என்றால் 3 பேர் போனோம். நான், என் மகன் கிருஷ்ணமூர்த்தி, என் மகன் அழகர்சாமி ஆகியோர் கேட்கத்தான் போனோம். பின்னர் கூட்டம் கூடியது. அவ்வாறு நாங்கள் மூவரும் சென்றபோது பொதுமனிதர்கள் யாரையும் கூட்டிப்போகவில்லை என்றால் சரிதான். நாங்கள் சங்கிலி வீட்டிற்கு போகும்போதே சண்டை போடும் நோக்கத்தில் கட்டை, கத்தி, அருவாள் போன்ற ஆயுதங்களை கொண்டுசென்றோம் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கும் சங்கிலி குடும்பத்திற்கும் முன்விரோதம் இல்லை என்றால் சரிதான். நாங்கள் சங்கிலியை தாக்கவேண்டும் என்ற நோக்கத்தில் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு சென்றதாகவும் அப்போது அங்கு நடந்த சண்டையில் நாங்கள் வைத்திருந்த ஆயுதங்களால் எங்கள் மீது பட்டு என் மகன் கிருஷ்ணமூர்த்தி

இறக்கநேரிட்டது என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் இறந்துபோனவர் என் மகன் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.02.17 17:22:00 +0530

Principal District Judge,
Dindigul.